விலை 20/-

"ஆய கலைகளில் ஆற்றல் பெருக
கண்மணி கரம் தருவாள்!"

# கண்மணி

மாணவர் சுய முன்னேற்ற மாதாந்தப் பத்திரிகை

கண் 9 | புரட்டாதி 2009 | மணி: 12



## உள்ளே.......!


X+ ஊடகக் கல்வி உங்களுக்கு.... -க. வேல்தஞ்சன்

X+ சக்தி மானாக சக்தி வழிபாடு - சிவமகாலிங்கம்

X+ நாவலர் காட்டிய நல்வழி -கு. கோபிராஜ்

X+ காலத்தை உணர்ந்த கல்வி - வீராங்கன்

X+ நல்லதையே பார்த்தால்...... -அன்னைதாசன்

X+ முருகையா மீண்டு(ம்) வா! - பா. மகாலிங்கசிவம்

X+ நல்ல நட்பை வளர்க்க... -மு. சொருபினி

X+ மாணவர் போட்டிகள்

X+ படங்களுக்கு வர்ணம் தீட்டுவோமா

X+ மற்றும் பல அம்சங்களுடன்.....



ஆசிரியர்
இரா. ஜெயக்குமார்
(B.A.Dip in Education)
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.


ஆலோசகர் குழு
பா. தனபாலன்.
(M; Phil in Education)
நிபுணத்துவ ஆலோசகர்,
கல்வி வழிகாட்டல் ஆலோசனை
நிலையம். யாழ்ப்பாணம்.

புலவர் ம.பார்வதிநாதசிவம்.

சிவத்தமிழ் வித்தகர்
சிவமகாலிங்கம்
(B.A,Dip in Edu.SLEAS )
கவிமணி க. ஆனந்தராஜா
கவிமாமணி கல்வயல் வே.குமாரசாமி

தொடர்புகளுக்கு 0215100282


## கண்மணியின் கண்மணிகளுக்கு....!



இது நவராத்திரி பூசைக்காலம் அல்லவா? ஊடகங்கள் வழியாகவே நவராத்திரி பூஜையின் சிறப்பை நாம் அறிந்து கொள்கின்றோம். ஆன்மீக எழுச்சி பெறுகின்றோம். எனவே ஊடகக் கல்வியும் ஊடகப் பயன்பாடும் எமக்கு அவசியமானவை. இதன் வழியாக நாவலர் வளர்த்த நல்ல சமய நெறியை நாமும் காப்போம். நலம் பெறுவோம்.

-இரா. ஜெயக்குமார்

## இலட்சியம் - சாதனை - வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம் – பாடசாலை – வெகுசன ஊடகங்கள் ஊடகக் கல்வியை விளங்கிக் கொள்ளுதல்

குடும்பம், பாடசாலை, வெகுசன ஊடகங்கள் ஆகியன ஒரு பிள்ளையில் அளவுகடந்த செல்வாக்கைச் செலுத்துகின்றன. ஒரு பிள்ளை தான் தன்னுடன் தொடர்பாடல் செய்வதிலும் (Intra – Personal Communication), ஒரு பிள்ளை மற்றைய ஆளுடன் தொடர்பாடல் செய்வதிலும் (Intra – personal Communication) ஒரு பிள்ளை குழுத் தொடர்பாடல் செய்வதிலும் (Group Communication), ஒரு பிள்ளை வெகுசன தொடர்பாடல் (Mass Communication) பற்றி அறிவதிலும், ஈடுபாடு காட்டுவதிலும் குடும்பம், பாடசாலை, வெகுசன ஊடகங்கள் ஆகிய மூன்று நிறுவனங்களும் சம்பந்தப்பட்டுள்ளன.

மேலே சொல்லப்பட்ட நான்கு வகையான தொடர்பாடல்கள் மூலமே ஒரு பிள்ளைக்கு தகவல் அளிக்கப்படுகின்றது ; கல்வி ஊட்டப்படுகின்றது ; மகிழ்வும் மனநிறைவும் கொடுக்கப்படுகின்றன. நான்கு வகையான தொடர்பாடல்களும் அடிப்படையில் மூன்று வகையான பணிகளை ஒன்றுடன் ஒன்று சேர்ந்த நிலையில் வழங்குகின்றன. அவையாவன: 1) தகவல் அளிக்க ( To inform ) 2) கல்வி ஊட்ட (To educate) 3) மகிழ்வு ஊட்ட (To entertain)

பிள்ளை உணவு, உடை, வசிப்பிடம் ஆகிய மூன்று அடிப்படைத் தேவைகளையும் தனது குடும்பத்திடமிருந்து பெறுகின்றது. குடும்பத்திடம் தகவல், கல்வி, மகிழ்வு ஆகிய மூன்றையும் மேலும் பெறுகின்றது. பாடசாலையில் சம்பந்தப்படும் கல்வித்திட்டத்தினூடாக ஒரு பிள்ளை தகவல், கல்வி, மகிழ்வு ஆகிய மூன்றையும் பெறுகின்றது. அவ்வாறே வெகுசனத் தொடர்புச் சாதனங்களான அச்சு ஊடகங்கள் (Print Media), இலத்திரனியல் ஊடகங்கள் (Electronic Media), புதிய ஊடகமான இணையத் தளங்கள் (New Media) ஆகியவையும் தகவல் அளித்தல், கல்வி ஊட்டுதல், மகிழ்வு ஊட்டுதல் ஆகிய பணிகளையே பிரதானமாகச் செய்கின்றன. எனினும் குடும்பம், பாடசாலை, வெகுசன ஊடகங்கள் ஆகியன மூலம் பெறும் தகவல்கள், கல்வி, மகிழ்வு ஆகியவற்றில் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் அடிப்படையிலும் மேலெழுந்தவாரியாகவும் காணப்படலாம்.

பிள்ளைகளின் இளமைக்காலத்தில் அவர்களது சரி, பிழைகள் பற்றிய கோட்பாடுகள் (Morals – Principles of right and wrong), தனிப்பட்ட நம்பிக்கைகள் (Personal belief),ஒழுக்கம் Ethics) ஆகியன வடிவமைக்கப்படுவதில் குடும்பம், பாடசாலை, வெகுசன ஊடகங்கள் ஆகிய நிறுவனங்கள் பூரணமாகப் பொறுப்பேற்க வேண்டியன. ஒரு பாரிய பொறுப்பைக் கொண்டுள்ள இம் மூன்று நிறுவனங்களுக்கும் ஒழுக்கம் இருக்கவேண்டுமென சமூகவியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

குடும்ப ஒழுக்கம் (Family ethics) அபிவிருத்தி அடைந்த சமூகங்களிலும் சரி, வறுமை மிக்க சமூகங்களிலும் சரி ஒழுக்கப் பிறழ்வுகள் மிக்கதாக இருப்பதை நடைமுறையில் நாம் அவதானிக்கக் கூடும். கல்வி ஒழுக்கமும் (Educational ethics) ஒழுக்கக் கல்வியும் ( Education of ethics) இவ்வாறான ஒழுக்கப் பிறழ்வுகளிலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்றி வழிகாட்டி நேர்மைப்படுத்தும் என்பதே திட்டவட்டமாக எதிர்பார்க்கப்படும் பிரதான விடயமாகும். குடும்பம், பாடசாலை ஆகிய நிறுவனங்களுக்குச் சமனாக சில வேளைகளில் அதனிலும் அதிகமாக – தகவல்களை அளித்தல், அறிவூட்டுதல், பொழுதுபோக்கு அம்சங்களினூடாக மகிழ்வூட்டுதல் ஆகிய தளங்களில் பிள்ளைகளின் மீது பாதிப்பையும், செல்வாக்கையும் செலுத்துகின்ற வெகுசன ஊடகங்களுக்கும் ஊடக ஒழுக்கம் (Media ethics) மிக மிக வலியுறுத்தப்படுகின்றது.

குடும்ப ஒழுக்கம், கல்வி ஒழுக்கம், வெகுசன ஊடக ஒழுக்கம் ஆகிய அனைத்திலும் மிக அடிப்படையாக வலியுறுத்தப்படும் ஒழுக்கம் - உண்மையைக் கண்டறிக ; உண்மையைப் பேசுக " என்பதாகும். "பொய் சொல்லக் கூடாது பாப்பா ....." என்று மழலைக்கு பாட்டுரைக்கிறார் பாரதியார். உண்மை, நேர்மை, நடுநிலைமை, பக்கச் சார்பின்மை ஆகியவை பிரதான ஒழுக்கங்களாகும்.

இயற்கை விஞ்ஞானிகளும், சமூக விஞ்ஞானிகளும், உண்மைகள் விஞ்ஞான பூர்வமாகக் கண்டறியப்பட வேண்டும் என்கின்றனர். சமய மார்க்கங்கள் '"நன்னெறி தழைத்தோங்குக" என்கின்றன.

உண்மைகளை கண்டறிதல், அவ்வுண்மைகளுக்கு நடுவு நிலமை தவறாமல் நேர்மையுடன் செயற்படுதல் முதலிய அம்சங்கள் நிறைந்த ஒழுக்கம் பற்றிய ஆற்றல்களையும், திறன்களையும், அறிவையும் பிள்ளைகளிடம் வளர்த்தெடுப்பதில் ஒரு நாட்டின் கல்விக்கொள்கை, வெகுசன ஊடகங்களின் கொள்கை ஆகியவற்றுக்கு நேரடியாக தொடர்பு உள்ளது.

ஆகையினால் வெகுசன ஊடகங்களின் ஒழுக்கம், தொடர்பாடல் கோட்பாடுகள், வெகுசன ஊடகங்களின் வரலாறும் வளர்ச்சியும், ஊடகங்களின் வகைகள், வெகுசன ஊடகங்களை அபிவிருத்திக்கும் சமூக மேம்பாட்டுக்கும் பயன்படுத்துதல் முதலியனபற்றி "தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்" (Communication and Media Studies) எனும் பாடம் ஒன்றின் மூலம் இலங்கை மாணவர்கள் கற்கும் வாய்ப்பு அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மட்டத்தில் தரம் 10, 11, 12, 13 ஆகிய வகுப்புக்களில் இப்பாட நெறியை கற்பிக்கக் கூடியதாக இலங்கையின் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் அண்மைக் காலமாக "தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்" எனும் தெரிவுப் பாடம் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒழுக்கமில்லாத, வெறும் வியாபார நோக்குக் கொண்ட சினிமாக்கலையும், தொடர் நாடகங்களும், வெகுசனங்களை கவர்வதற்கான கீழ்த்தரமான யுக்தியைக் கையாளும் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் குவிந்து காணப்படுகின்றமையும், மாணவர்களைச் சீரழிக்கவல்ல விளம்பரத் தந்திரங்கள் கொண்டியங்கும் இலத்திரனியல் ஊடகங்களும் மலிந்து போயுள்ள இன்றைய உலகில், நன்மை, தீமைகளை விளங்கிக் கொள்வதற்கு மாணவர்களுக்கு ஊடக விழிப்புணர்வு (Media awareness) தேவை. அது தொடர்பாடல் ஊடகக் கல்வியினூடாக சாத்தியமாகும். மேலும் அபிவிருத்திக்கும், சமூக மேம்பாட்டுக்கும் வெகுசன ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் எமது மாணவர்கள் கற்கவேண்டும். அதற்கு தொடர்பாடல் ஊடகக்கல்வி அவசியமாகின்றது.



**க. வேல்தஞ்சன்**
*ஊடகவியலாளர், வருகை தரு விரிவுரையாளர்,*
*ஊடகவளங்கள் பயிற்சி நிலையம், யாழ் பல்கலைக்கழகம்.*

## சிந்தனைத் துளிகள்

1) ஒரு மனிதனை அவனுடைய சூழ்நிலை உருவாக்குவதில்லை. அவனுடைய மனம்தான் உருவாக்குகின்றது.
2) மனிதனை உயர்த்துவது பணமன்று, பதவியன்று, குலமன்று, பருமனன்று, உயரமன்று. அறிவொன்று தான் மனிதனை உயர்த்தும்.
3) ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணம்.
4) ஆசை இருப்பவரிடம் அன்பும் ஆனந்தமும் நெடுநாள் தங்குவதில்லை.
5) நாம் விரும்புவது நமக்கு கிடைப்பதில்லை. எனவே கிடைக்கப் போவதையே நாம் விரும்புவோம்.
6) மனம் உறுதியாக இருந்தால் பாம்பின் நஞ்சுகூட சக்தியற்றதாக்கி விடும்.
7) நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டும் என்றால் மற்றவர்களுக்கு மனம், வாக்கு, காயங்களால் துன்பம் செய்யக் கூடாது, நன்மையே செய்தல் வேண்டும், இதுதான் உண்மையான பண்பாடு.
8) தியானம் செய்யவும், மன்னிக்கவும், நன்றி கூறவும் தெரிந்து கொண்டு விட்டால் நாம் மகிழ்ச்சியைத் தேடி ஓடவேண்டியதில்லை. அதுவே நம்மை தேடி ஓடி வரும்.
9) "நம்மால் எப்படி இந்தப் பெரிய காரியத்தை செய்ய முடியும்; என்று நினைத்து நல்ல செயல்களை செய்யாது இருந்து விடாதே. நீர் துளிதுளியாக கொட்டியே குடம் நிரம்பி விடும்.



**செ. ஸ்ரீதரன்**
**தரம் – 09**
**யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்**

## தாயின் அன்பு

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் ......" என்ற ஔவையின் வாக்குக்கிணங்க, அன்னையானவள் எம்மை வழி நடத்தி செல்கிறாள். ஐயிரண்டு திங்கள் அங்கமெல்லாம் நொந்து, சுமந்து, அவனியிலே எம்மை ஈன்றெடுத்தவர் அருமைத் தாய். அப்படிப்பட்ட அன்னையின் அன்பு "வற்றாத கடல்" போல் அளவிடமுடியாதது. 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்' என்னும் பொய்யாமொழிப் புலவரின் அருள்வாக்கிற்கிணங்க அன்னையவளின் அன்பினை அடைத்து வைக்க முடியாது. கருவிலே உருவாகும் கருணையின் வடிவான தாயின் பாசம் பாரினிலே நாம் மறையும் வரை எம்மை தொடர்ந்து கொண்டே வரும்.

அன்புக்கடல் அன்னையின் புகழை "ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசு இருந்தால் வாங்கலாம்; அம்மாவை வாங்க முடியுமா?" என்று திரைப்பட பாடல்களில் கூட வர்ணித்துள்ளார்கள் துன்பத்தில் துவண்டு நிற்கும் எம்மை அன்பு வார்த்தைகளால் ஆறுதல் கூறி தேற்றுபவரும் தாயே, "தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை" என்னும் நல்வாக்குக்கிணங்க கடவுளுக்கு அடுத்த படியாக வணக்கத்துக்குரியவள் தாயே. எம்மை தாலாட்டி, சீராட்டி, சோறூட்டி வளர்த்தெடுத்த அன்னையின் பாசத்தை அளவிடமுடியாது.

லோகாதரன் ஷஜிதா
தரம் – 8A
யா/மகாஜனாக் கல்லூரி

## இறைவன்

கடவுள் படைத்த உலகினில்
அவனே எங்கும் உறைகிறான்
வெற்றி மீது வெற்றி ஈட்டிச் செல்லும்
வகையில் எம்மை ஆள்பவனும் அவனே
இன்னலிலும் வறுமையிலும் தொழும்
அடியவர்க்கு
கருணையுடன் துணைபுரிபவனும் அவனே
அவனின்றி ஒரு அணுவும் அசையாது
அவனின்றி காற்றும் வீசாது
தூணிலும் அவனே துரும்பிலும் அவனே
ஊணிலும் அவனே உடம்பிலும் அவனே
இவ்வாறு புகழ்கேட்கும் எமது இறைவன்
என்றும் எமக்கு துணையே



பா. சியானா
8C
யா/ வயாவிளான் ம.ம.வித்தியாலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மகளை வாழ்விக்க நீ மீண்டும் வா!

(முருகையன் நினைவுக் கவிதை)

நல்ல வகைக் காவியங்கள் நாடகங்கள் கட்டுரைகள்
எல்லோர்க்கும் இன்பமளிக்கும் தேன்கவிகள் - சொல்லி
புவிக்குத் தமிழின் புகழுரைத்த மேலோய்
கவிக்குள் உயிரொன்றி வாழ்.

மண்ணுள் மறைந்தொளிரும் மாணிக்கக் கற்களைப் போல்
விண்ணை விளக்க விரைந்தனையோ? எண்ணியெண்ணி
நெஞ்சம் கலங்க நெடுங்காலம் தேடிடினும்
உன்னையினிக் காண்பதரிது.

புன்னகை செய்யும் வதனமும் எங்கும்
புதுமையை தேடிடும் கண்ணும்
சின்னதோர் உருவும் அதற்கள வான
தாடியும் சீரியஸ் கதையும்
தன்னையே தமிழுக்காய் அர்ப்பணம் செய்த
தாகமும் பல்துறை அறிவும்
எணமாய் மறைந்து போயின ஐயா,
எங்கு நாம் உமை இனிக் காண்போம்?



சபைதனின் நடுவே தலைமையாய் அமர்ந்து
சாற்றிடும் கவிதையைக் கேட்க
உவப்புடன் வருவோர் ஆயிரம் உள்ளர்.
ஒவ்வொரு சொல்லையும் தேர்ந்து
அமைவுறத் தொடுத்து அருங்கவி ஆக்கி
அவையினர் மகிழ்ந்திடப் படைப்பாய்.
எவையினைச் சொல்ல எவையினை நீக்க
எத்துறை யிலினுமுன் பெயரே!

காலனார் உந்தன் உயிர்தனைக் கவர்ந்த
கண்ணிமைப் பொழுதினில் நின்றுன்
சீலமும் நீ செய் பணிகளும் உன்னால்
செந்தமிழ் மகள் பெறும் பயனும்
காலமாற் றங்கள் கடந்ததாய் கவிசெய்
திறனையும் அறிந்திருப் பானேல்
வாழவைத் திருப்பான் கண்ணிலான் வேகம்
காட்டினான் வறுமையுற் றோம் நாம்.

சங்கம் அமைத்து தமிழை வளர்த்தோர்கள்
எங்கள் இனமோ எனக் கேட்கும் - சங்கை வரத்
தாழ்வுற்று நின்று தவிக்கும் தமிழ் மகளை
வாழ்விக்க நீ மீண்டும் வா.

*பா. மகாலிங்கசிவம்*
*ஆசிரியர்*
*யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி*

# பண்புச் செயல்கள்

1. தகுந்தவர்களுக்கு தானம் செய்.
2. ஒழுக்கபோதனைகளைப் பின்பற்று.
3. நல்லெண்ணங்களைப் பின்பற்று.
4. நல்லெண்ணங்களை நினை.
5. பிறருக்கு பணி செய், பிறரை கவனித்துக் கொள்.
6. பெற்றோரையும், மூத்தோரையும், குருவையும் மதித்து நட, அவர்களுக்கு வேண்டுவன செய்.
7. உன் புண்ணியங்களில் ஒரு பகுதியை பிறருக்குக் கொடு.
8. பிறர் உனக்கு கொடுக்கும் புண்ணியங்களை ஏற்றுக்கொள்.
9. நல்ல கருத்துக்களை பிறருக்கு கற்றுக் கொடு.
10. உன் குற்றங்களை நீக்கு.

யோ. துர்க்காயினி
தரம்-6A
யா/இராமநாதன் கல்லூரி

பொது அறிவுப் போட்டி 3இன் விடைகள்

1. டென்மார்க்
2. கவிஞர் முருகையன்
3. அசோக டி சில்வா
4. யூன் 22
5. **H1 N1**
6. இந்தியா
7. நாத முனிகள்
8. 2010 சித்திரையில்
9. இந்தியா
10. மைக்கல் ஜக்சன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 தி | ர் | 5 கா | ம | ம் |
| ன் | ண் | | 6 ம | ந் | தி |
| ணி | ணை | 4 இ | ன் | 7 ப | ம் |
| வே | ந் | த | | 8 து | தி |
| ட் | | ய | 10 ஓ | ம | ம் |
| டை | | ம் | து | ம் | பு |



கோப்பாய் கலைவாணி கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது மாணவிகளின் நாட்டிய நிகழ்வு ஒன்றினை படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிறுகதை)

# சப்பாத்து

அதிகாலைச் சேவலின் அலறலுடன் திடுக்குற்று விழித்த கமலம் அப்போதுதான் கணவரைச் சந்தைக்கு அனுப்பவேண்டும் என்ற எண்ணம் சிந்தனையைத் தைக்க "என்னங்கோ இந்த வாழைக்குலையை சந்தைக்கு கொண்டு போக வேணுமல்லோ" என்று கிருஷ்ணனின் கால்களில் தட்டியபோது அவரும் திடுக்கிற்று "என்னடியப்பா எத்தனை மணி" என்றபோது "நாலரையாச்சு முகத்தை கழுவிற்று வாங்கோ, தேத்தண்ணி ஊத்துறேன்" என்று கூறியபடி அடுக்களைப் பக்கம் செல்ல, அவரும் கிணற்றடியை நோக்கிச் சென்றார்.

தீப்பட்டியை தட்டி, விளக்கைக் கொழுத்தி, அடுப்பைப் பற்றவைத்த போதுதான் சரவணன் கேட்டு அடம்பிடித்த "கட்டுச் சப்பாத்து" ஞாபகத்திற்கு வந்தது. "எப்படியும் இன்றைக்கு மனிசன் இந்தக் கதலிக்குலையை இரண்டுக்காவது விற்றார் என்றால் பெடியனுக்கு இன்றைக்கு சப்பாத்து வாங்கலாம். அவனும் எப்பவும் சப்பாத்து இல்லாமல் பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று அடம்பிடிக்கிறான். இன்றைக்கு எப்படியும் இந்தப் பிரச்சனைக்கு முடிவுகட்ட வேணும்" என்று எண்ணியவாறு முந்தானையால் முகத்தை அழுத்த துடைத்தபடி அடுப்பை மூட்டி கேற்றிலை ஏற்றிவிட்டாள்.

"தம்பி... நேரமாச்சு, எழும்பிப் படியனை, உனக்கு திருக்குறள் 40 அதிகாரம் மட்டும் ரீச்சர் பாடமாக்க சொன்னவா அல்லோ? "எழும்பு" என்று மெதுவாக தனது ஏழாம் ஆண்டில் கற்கும் மகனை பெரும் பிரளயத்திற்குப் பின்னால் தூக்கி, நிறுத்தி, பற்பொடி கையில் கொட்டி விட்டாள்.

"அம்மா, இண்டைக்கு நீ வாங்கித் தரேல்லை இனி நான் செத்தாலும் பள்ளிக்கூடம் போக மாட்டன்" என்று புறுபுறுத்தபடி கிணற்றடிக்குச் சென்றான்.

சைக்கிள் கரியரில் வாழைக்குலையை கட்ட உதவியபடி "இஞ்சருங்கோ, இந்த புயல் மழைக்குப் பிறகு வாழைக்குலை நல்லாப் போகுது. மறக்காம வித்துப்போட்டு சரவணனுக்கு ஒரு சோடி 7ம் நம்பர் சப்பாத்தும் எடுத்துட்டு, மிச்சத்துக்கு அரிசி, சாமானை வாங்கி வாருங்கோ. எப்படியும் ஆயிரத்துக்கு கிட்ட செலவாகும், மறந்திடாம எடுத்திட்டு வாங்கோ அவன் இனிமேல் சப்பாத்தில்லாமல் பள்ளிக்கூடம் போகமாட்டேன் எண்டுறான்" என்றவளுக்கு பதிலாக "சரி" என்று தலையசைத்து சைக்கிளில் கால் பதித்தார்.

மிக ஏழ்மையான குடும்பமாயினும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கமலம் முன்னின்று குடும்பம் நடத்தி வருகிறாள். காலையில் செருப்புடன் புறப்பட்ட சரவணன் மீண்டும் எச்சரிக்கை ஒலியை தாயின் காதில் ஓதிப் புறப்பட்டான். பாடசாலை காலைப் பிரார்த்தனையின் பின் மாணவர் உடை, ஒழுங்கு கவனிக்கப்பட்டபோது சரவணனது நிலை மிகவும் மோசமாக் கருதப்பட்டு மைதானத்தில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டான். ஒழுங்கு, உடை நலன் அவதானிக்கும் பொறுப்பிலுள்ள ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர், அவரது கண்ணில் இன்றுடன் எட்டாந் தடவையாக சப்பாத்தில்லாமல் காணப்பட்டமை அவருக்கு மிகவும் கோபத்தை ஏற்றியதும் மூர்க்கமாக பிரம்பினால் காலின் கீழ் தழும்புகளை ஆர்ப்பரித்தார். அழுகையை அடக்க முடியாத அவன் எண்ணமும் கோபமும் தாயின் மீது கோபத்தை உண்டுபண்ணியது. அழுதழுது கண்கள் சிவந்து கண்ணீர் வற்றியது.

மாலை வீட்டையடைந்த போது தந்தை குடிபோதையில் வாதாடுவதை கண்ணுற்றான். கோபம் தன்மீதே திரும்பியது. புத்தகங்களை வீசியெறிந்தவன் தண்ணீர் பம்பியுள்ள அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டான்.

சண்டை ஓய்ந்து, கமலம் மகனைத் தேடியபோதுதான் பம்பி அறையினுள் மருந்து மணம் வீசக்கண்டு, அலற ஆரம்பித்தாள். ஊரே திரண்டது. போதை இறங்கிய கிருஷ்ணன் நடுநடுங்கியபடி கதவைத் திறந்தபோது வாயில் நுரையுடன் இயமன் கையில் புகுந்திருந்தான்.

நடுவீட்டில் வைக்கப்பட்ட சரவணன் உடல் மீது புதுச் சப்பாத்தைக் காட்டி, தன் தலையில் அடித்துக் கொண்ட கிருஷ்ணனும், வயிற்றிலடித்துக் கொண்ட, கமலத்தினது ஓலமும் கண்ணீரை கூடியவரை மட்டுமல்ல, அக்கிராமத்தையே கண்ணீர் சிந்த வைத்தது.




செல்வநாயகம் ரவிசாந்
குப்பிளான்

---

## பழமொழிகள்

- யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும்.
- கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கைவைக்காதே
- துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்
- பாம்பின் கால் பாம்பறியும்
- சாய்ந்த மரத்தில் ஓடி ஏறலாம்
- குரங்கின் கையில் கொள்ளி அகப்பட்டதாம்



ந. சௌமியா
யா/ஏழலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை உணர்ந்த கல்வி முன்னேற்றத்திற்கு வழி

இருளுக்கு ஒளிதரும் சூரியன் தன் கடமையை சரியான நேரப்படி முடிப்பதனால் எமக்கெல்லாம் வாழ்வில் இருள் நீங்குகிறது. எமது மனங்கள் கொண்ட திசை நோக்கி நகர முடிகிறன்றது. இயற்கை எமக்களித்த வாய்ப்புக்காக நாம் செய்யும் காரியங்கள்தாம் வியக்கவும், சிந்திக்கவும் வைக்கின்றன. இயற்கையின் ஒவ்வொரு பருவமும் போல மனிதகுலமும் பல்வேறு பருவங்களைத்தாண்டி, காலப்பாதையில் சுழல்கின்றன. இத்தகைய அற்புத வாழ்வில் மீண்டும் எண்ணிப்பார்க்கவும், அனுபவிக்கவும் முடியாத பருவம் மாணவப்பருவம். அத்துணை அறிவுகளையும் திரட்டி ஒரு நிறத்துக்குள் அடக்கிய பருவமிது. வெளிப்படையாகச் சொல்லப்போனால், ஒருநாட்டின் அடி அத்திவாரங்கள் மாணவர்கள்தான். பொதுவாக ஒருநாட்டின் வளர்ச்சி நிலை என்பது, அடி மட்டத்திலிருந்து மேலெழும்போது சிறந்த எதிர்காலத்தை உருவாக்கமுடியும். அதாவது ஒருசிறுபங்களிப்பும், மக்களது பங்களிப்பும் இன்றியமையாதவை. இவை கீழிருந்து மேலான அணுகுமுறையானதாகும். பொதுவாக நாட்டின் அபிவிருத்தி வெறுமனே பொருளாதாரத்தில் மட்டுமன்றி, அது சார்ந்து விளங்கும் பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியதாகவே அமைந்திருக்கின்றது.

மனித வாழ்வில் ஒவ்வொரு படி நிலைகளும் மாற்றம் பெறும்போது அனைவரும் அதற்கேற்ப மாறவேண்டியவர்களாக மாற்றப்பட்டுவிட்டனர். நவீன உலகின் பரிணாமம், பாரிய வெற்றிகளைத் தருகின்ற அதே வேளை, ஆபத்தான பல சம்பவங்களையும் உற்பவிக்கத் தவறவுமில்லை. தேவையின் அடியாக மாறும் சிலவற்றை அனாகரிகத்துக்காகப் பயன் படுத்துவோரும் இருக்கவே செய்கின்றனர். தேவையின் பாற்பட்டுத்திருப்பப்படும் மனிதர்கள் தகுந்த முறையில் அவற்றைக் கையாளுவதும் அதனால் உயர்வடைவதும் விரும்பத்தக்கதே. மாறாக அவை அதிகாரம், அரசியல், தனியுரிமை போன்ற வன்முறைகளுக்குள் சிக்கிக்கொள்வதை யாரும் ஏற்கத்தயாராகவுமில்லை, அப்படி ஏற்கவும் முடியாது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் 'வெள்ளைச்சீருடையின் கல்விப்பாரம்பரியம் சிறப்பாக இயங்குகின்றது' என்பது பொதுவான கருத்தாகக் காணப்படுகின்றது. எழுத்தறிவு வீதத்திலும் சரி, கல்வியறிவு வீதத்திலும் சரி உலகளாவிய நிலையில் இலங்கை குறிப்பிட்ட இடத்தை வைத்திருக்கின்றது என்பதுதான் பொதுமதிப்பீடு. இவை உறுதிப்படுத்தப்படுவதற்கு அரசின் கல்வித் திட்டங்களும், சீர்திருத்தங்களும் குறிகாட்டியாக விளங்குகின்றன. எமது கல்விப்பாரம்பரியம் இவ்வாறு அமைகின்ற போதும் இந்தக்கல்வியானது நடைமுறையில் சிக்கல்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அதாவது இன்று ஏதோ ஒரு தொழிலை பெறவேண்டும் என்ற இலக்குடன் தொழிற்கல்வி முக்கியப்படுத்தப்பட்டிருக்கின்றது. பாடசாலைக் கல்வியை சரிவரப் பயின்று பட்டம் பெறும் ஒருவரும், கல்வியை இடை நிறுத்தி ஏதோ ஒரு தொழிற்கல்வியைப்பெற்ற ஒருவரும் இன்று சமமானவர்கள் அல்லது பட்டதாரியை விட தொழிற்கல்வியாளன் புலமை வாதியாக இருப்பது உணரப்படுகின்றது.

அரசினால் கட்டாயக்கல்விக்கான வயதெல்லை 14இல் இருந்து 16ஆக உயர்த்தப்பட்டிருப்பதும், "அனைவருக்கும் இலவசக் கல்வி" திட்டமும் நாட்டைப் பொறுத்தவரை தேவையானவை என்பது ஒருபுறமிருக்க, இவை நாட்டின் பொருளாதாரத்தில் எவ்வளவிற்கு பங்குவகிக்கின்றதென்பதும் நோக்கப்பட வேண்டியதே. இவ்வாறான கேள்விகளுக்கப்பால் இத்திட்டங்கள் நாட்டின் முழுப்பாகத்திலும் நடைமுறையில் இருக்கின்றதா? என்பது சிந்திக்கவேண்டிய விடயமாகும். அதாவது சாதாரண கிராமப்புறப் பாடசாலைகளுக்கும், நகரத்திலுள்ள உயர்தரப் பாடசாலைகளுக்குமிடையில் இருக்கும் வித்தியாசம் என்பது பாரிய இடைவெளிகளைத் தோற்றுவித்திருக்கின்றது கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் முதல் பாடசாலைகளினுடைய உள்ளீட்டு, வெளியீட்டு அமைவுகள்வரை பாகுபாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய நெருக்கடிகளுக்குள் கல்விகற்கும் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் கல்வியறிவிற்கும், உயர்தரப்பாடசாலை மாணவர்களது கல்வியறிவிற்குமிடையில் வித்தியாசம் பார்க்கப்படுவதுமில்லை. அவ்வாறு பார்க்கவும் முடியாது. இதுபோன்ற பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கிராமத்துப் பாடசாலை மாணவர்களினது திறமைகள் என்பது பாராட்டத்தக்கதாகவும், மதிக்கப்பட வேண்டியதாகவும் இருப்பது ஆச்சரியப்பட வேண்டிய விடயம்தான். ஆனால் இந்த உயர்விற்கு பின்னணியாக பல காரணிகள் முக்கியம் பெறுகின்றன. அவை

- ஒதுக்கப்பட்ட பாடசாலை என்ற உணர்வு.
- ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை.
- பெற்றோரின் எதிர்பார்ப்பும் ஊக்கப்படுத்தலும்
- பிள்ளைகள் தமது குடும்நிலையை உணர்ந்து கற்றல்.
- பெரும்பாலும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்பதால் தமது அந்தஸ்தை உயர்த்தும் பொறுப்பு.
- தற்காலத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் கல்வியில் தங்கியிருத்தல்.

போன்றவற்றைக் கூறமுடியும்.

எழுதியவர்-
வீரங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதையே பார்த்தால் நன்மையே கிடைக்கும்

நாம் வாழ்வாங்குவாழ இதிகாசக் கதைகள் எமக்கு உதவுகின்றன. கூட்டுக்குடும்பமாக அம்மா, அப்பா, ஆச்சி, அப்பு, அண்ணன், தங்கை, மாமா, மாமி, மருமகள் என உறவு சொல்லி அன்று வாழ்ந்தவர்களின் பிள்ளைகளுக்கு பாட்டிகள் இவற்றைச் சொல்ல ஓர் பண்பான சூழல் உருவாகியது. இன்று இந்நிலை மாறியதன் தாக்கத்தை நாம் உணருகின்றோம் அல்லவா?

பாரதத்தில் துரியோதனன் கண்ணனிடம் கேட்கிறான் "நீ ஏன் எப்பவும் பாண்டவர் பக்கம் நிற்கிறாய்?" என்று. அதற்கு கண்ணன் சிரிக்கிறான். மறுநாள் துரியோதனனை அழைத்து "இந்த அத்தினாபுரத்திலே யாராவது நல்லவர்கள் இருந்தால், கூட்டி வா" என்கிறான். துரியோதனன் ஓடி ஓடி ஒவ்வொருவரையும் பார்க்கிறான். எல்லோரிலும் ஏதோ ஒரு குறை இருப்பதைக் கண்டு, "எவருமே நல்லவரில்லை" என்கிறான். "சரி, தருமா இங்கே நீ சென்று பார்' என்கிறான். தருமன் அனைவரையும் பார்க்கிறான். அவனுக்கு எவரிலும் குறைகள் தெரியவில்லை. அவர்களிடம் உள்ள நற்பண்புகளே தெரிகின்றன. கண்ணனிடம் வந்து, "கண்ணா இவர்கள் அனைவர்களுமே நல்லவர்கள்" என்கிறான்.



கண்ணன் சிரித்து, "பார்த்தாயா துரியோதனா, தருமனும் நீயும் பார்த்து, பழகிய மக்கள் ஒருவரே. ஆனால் உனக்கு அவர்களின் குறைகளே தெரிகின்றன. தருமனுக்கு அவர்களின் நிறைவுகளே தெரிகின்றன. எதிலும் நல்லதையே பார்த்து பழகு. நல்லதையே செய் நல்லதே நடக்கும். நான் தருமத்தின் படி நிற்கிறேன். குறைகள் இல்லாதோர் இக்குவலயத்தில் இல்லை" என்றான்.

பாரதப்போரின் முடிவில் தர்மனே வெல்கிறான். தர்மமே வென்றது. எனவே நாங்கள் அனைவரிலும், அனைத்திலுமே, நல்லதையே பார்த்து, நல்லதையே செய்வோம். நன்றாகவே நடக்கும். நன்மையே கிடைக்கும்.

-அன்னை தாசன்-

## பாடல் (குரு தெய்வம்)



மண்ணுலகில் நாம் வாழ
மங்கா ஒளி ஏற்றிய
மாண்பு மிகு ஆசான்களை
மனமார வாழ்த்திடுவோம்

எண்ணையும் எழுத்தையும்
ஏற்றி விட்டோர் என் மனதினில்
எல்லையில்லா கல்விதனையும்
எங்களுக்கு ஊட்டி விட்டார்களே

கரையில்லா கல்விதனை
சச்சிதமாய் எமக்குரைத்த
குருமாரை எப்போதும்
குறைவின்றி மதித்திடுவோம்.

வாழ்வெல்லாம் சிறந்திடவே
வழிகாட்டிய ஆசான்களை
வாயார வாழ்த்திடுவோம்
வாழ்வெல்லாம் போற்றிடுவோம்.

த. மதிஜா
6E
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## Parallel Proverbs

* **The face is the index of the mind**
  அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
* **Christmas comes but once a year**
  ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா?
* **Two much of anything is good for nothing**
  அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
* **Look before you leap**
  ஆழம் அறியாமல் காலை விடாதே
* **Till for tat**
  ஆனைக்கும் அடி சறுக்கும்
* **Union is Strenghth**
  ஒற்றுமையே பலம்
* **Every tide has its ebb**
  ஏற்றம் உண்டானால் இறக்கம் உண்டு
* **Health is welth**
  நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

*BY:- R.Thulashika*
*Grade- 06*
*Chundikuli Girls College*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் போட்டி - 05

மாணவர்களே! பின்வரும் வினாக்களுக்கான விடைகளை 20.10.2009 ற்கு முன் கிடைக்கக்கூடியவாறு சுய முகவரி, பாடசாலை முகவரி என்பவற்றுடன் அனுப்பி விடுங்கள். கற்கும் தரம், பிரிவு என்பன குறிப்பிடப்படவேண்டும். சரியான விடையனுப்பும் அனைத்து மாணவர் பெயர்களும் கண்மணியில் பிரசுரமாவதுடன் 3 அதிட்டசாலிகளுக்கு இலவச கண்மணி பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

## போட்டி வினாக்கள்

1. 10 வது ஆசியக் கிண்ணக் கிரிக்கட் போட்டி நடைபெறவுள்ள ஆண்டு எது?
2. "ஜின்னா" பற்றிய சர்ச்சைக்குரிய புத்தகம் எழுதிய இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர் யார்?
3. அண்மையில் நடைபெற்ற யப்பானிய நாடாளுமன்ற தேர்தலில் அதிக ஆசனங்களை கைப்பற்றிய கட்சி எது?
4. சர்வதேச எழுத்தறிவு தினம் எது?
5. உலக ஆயுத விற்பனையில் முன்னனி வகிக்கும் நாடு எது?
6. இலங்கையின் நகர அபிவிருத்தி அமைச்சர் யார்?
7. மட்டக்களப்பில் தொழு நோயாளர் மருத்துவமனை உள்ள இடம் எது?
8. "பாஞ்சாலி சபதம்" எனும் குறுங்காவியத்தை இயற்றியவர் யார்?
9. பொது இடங்களில் குப்பை கொட்டுவொருக்கு 50 000 ரூபா அபராதம் விதிக்கும் புதிய சட்டத்தை கொண்டு வந்துள்ள இந்திய மாநிலம் எது?
10. "கங்கா கீதம்" எனும் சிறுகதைத் தொகுதியை எழுதிய ஈழத்து எழுத்தாளர் யார்?

# காட்சியும் கவிதையும் - 05



மாணவர்களே அருகிலுள்ள காட்சியை கவனியுங்கள். உங்கள் கற்பனைக் குதிரையை முடுக்கி விடுங்கள்.இக் காட்சியை 5 – 8 வரிகளுக்கு இடைப்பட்ட கவிதையாக்கி 20.09.2009 ற்கு முன் கிடைக்கக்கூடியவகையில் சுய முகவரியுடன் அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதைகள் பிரசுரமாவதுடன், வெற்றி பெறும் ஒருவருக்கு இலவச "கண்மணி" அனுப்பி வைக்கப்படும்.

# குறுக்கெழுத்துப்போட்டி – 5

**இடம் இருந்து வலம்**

1. இலங்கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
3. புராதன மன்னர்கால கட்டாய சேவை முறை இறுதியெழுத்து விடுபட்டுள்ளது.
4. பூவை குறிக்கும் வடசொல்
5. ஒன்று கலத்தலைக் குறிக்கும்
6. வேதத்தை அடிப்படையாகக் கொண்ட சமயம்
8. தேர் என்னும் பொருள் தரும். இறுதி எழுத்து விடுபட்டுள்ளது.
9. பிரி

**மேலிருந்து கீழ்**

1. இலங்கையில் நிலப்பரப்பில் மிகப்பெரிய மாவட்டம் இறுதியெழுத்து விடுபட்டுள்ளது.
2. இலங்கையில் வெளிவரும் சிங்களப் பத்திரிகை
3. ஒரு வகைப் பலகாரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | | 3 ல | | | |
| | 5 ச | | | | |
| 2 ரா | | கா | | | 7 மு |
| | 6 வை | | | | |
| 4 பு | | | | ■ | |
| 8 | | ■ | ■ | 9 | கு |

# Henry Wadsworth Long fellow (1807-1882)



Henry Wadsworth Longfellow Was born and died in Massachusetts, United States of America. Though not the greatest of American peots, he is by far the best known and most Widely popular because of his great simplicity, and because he preached a gospel of good will in musical Numbers Which Carried"Sweetness and light" into many homes. It has been well said that "He wrote for a young People in the boyhood of American literature and Opened for it the magical volume of old Romance.His later poems are stronger and more highly finished than those of his youth, but are not so popular.

**S. SELVARATNAM**
**THAIYIDDY,**
**KANKESANTHURAI.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாவலர் காட்டிய நல்வழி

யாழ்ப்பாணத்து நல்லூரில் ப. கந்தப்பிள்ளை, சிவகாமி என்போருக்கு கனிஸ்ட புதல்வனாக அவதரித்தவரே ஆறுமுக நாவலராவார். இவர் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரின் மரபினர் ஆவார். இவர் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், இருபாலை சேனாதிராஜ முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் என்போரிடம் தமிழ் இலக்கியங்களைக் கற்றார். யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்தமிசன் மத்திய கல்லூரியில் ஆங்கிலம் கற்றார். பின் அங்கு ஆசிரியராகவும் கடமையாற்றினார். 1846ல் சைவசமயப் பிள்ளைகளை ஒன்று திரட்டி, திண்ணைப்பள்ளி ஆரம்பித்தார். 1848ல் வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் வளர்ச்சி கண்டு, ஊக்கம் பெற்று, சைவர்களின் கேந்திர நிலையமான சிதம்பரம் சென்று, அங்கு போதிய ஆதரவு கிடைக்காமையால், மீண்டும் இலங்கைக்கு திரும்பினார். பின் பிரசங்கம் செய்து, பணம் பெற்று, 1864 சிதம்பரம் சென்று, வித்தியாசாலையை 3 மாதத்திற்குள் ஆரம்பித்தார்.1870இல் கோப்பாய், புலோலி எனும் இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலை அமைக்க முயன்றார். 1876ல் வண்ணையில் சைவாங்கில வித்தியாசாலையை ஆரம்பித்து நடத்தினார்.

1847ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் தொடங்கிய சைவப்பிரசங்கம் 1879ம் ஆண்டு ஆடிவரை பல்வேறு கருமங்களின் மத்தியிலும் விடாது செய்து வந்தார்.1849ம் ஆண்டு இந்தியாவில் திருவாவடுதுறை ஆதீனத்தில் "நாவலர்" என்னும் பட்டம் சூட்டப்பெற்றார். சைவத்தின் உண்மைகளை விளக்கி, சைவ மக்களிடையே புகுந்துள்ள மாசுக்களை நீக்கி, புறச்சமய தீவிர பிரசாரத்தினை தடுத்து நிறுத்தினார். கோயில் அதிகாரம், பிரமணீயம், வீரவணக்கம். முதலிய சக்திகளை சளையாது எதிர்த்து நின்றார். புராண படனம், துண்டுபிரசாரம், பிரசங்கமுறை என்பனவற்றை கருவிகளாக கொண்டு சைவப்பிரசாரத்தை முன்னெடுத்தார். 1849ம் ஆண்டு இந்தியாவில் அச்சு இயந்திரசாலை எனும் அச்சகத்தை நிறுவியவர், அறுமுக நாவலர் ஆவார். பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் என்பனவற்றை வசன நடையிலே எழுதியவர் ஆவார். பெரிய புராணவசனம், 1852ல் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரிலே வெளிவந்தது.

அனுட்டானவிதி முதற்புத்தகம், அனுட்டானவிதி இரண்டாம் புத்தகம், சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், சைவவினாவிடைமுதற்புத்தகம், சைவவினாவிடைஇரண்டாம் புத்தகம், அநாசாரம், திருக்கோயிற்குற்றங்கள், என்னும் தொகுப்புகள் சைவர்களின் நன்மைக்காக நாவலரினால் எழுதப்பட்டவை ஆகும் இதைவிட கிறிஸ்தவ கண்டனங்களாவன சைவதூசன பரிகரம், சுப்பிரபேதம், வச்சிர தண்டம் போன்றனவாகும். இதைவிட செய்யுள் நூல்களாவன திருமுருகாற்றுப்படை, கோயிற்புராணம், மருதூரந்தாதி போன்றன ஆகும்.

சீடபரம்பரையாக தம் வித்தியாசாலையில் கற்ற மாணாக்கர் பரம்பரை யொன்றினை உடையவர். நல்லூர் சதாசிவம்பிள்ளை தொடக்கம் 20ம் நூற்றாண்டுவரை நீண்டு செல்கின்ற அப்பரம்பரையில் சிலர் தமிழ் நாட்டிலும் சைவப்பணிகளில் முன்னின்று செயற்பட்டு உள்ளனர். இதைவிட சமுகப் பணிகளாவன யாழ்ப்பாணத்துப் பிரதேசத்தில் 1877 பாரிய உணவு தட்டுப்பாடு பஞ்சம் ஏற்பட்ட போது வறுமைப்பிடியில் இருந்து அவர்களை காக்க "கஞ்சித் தொட்டி" தான தருமங்களைச் செய்தார். 1879ம் ஆண்டு சட்டபையில் சேர். பொன். இராமநாதனை சட்டசபையில் தெரிவு செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். அதிலே வெற்றியும் கண்டார். இவருடைய காலத்திலே ஆள்பதியாக இருந்த துவைனம் துரையின் கொடுமைகளையும். ஊழல்களையும் மக்கள் முகம்பாராத செயற்பாட்டையும் கண்டித்து, இலங்கை தேசாதிபதிக்கு கடிதம் எழுதி அவருடைய செயற்பாடுகளை நெறிப்படுத்தினார், அத்தோடு மக்கள் ஒருங்கே வாழ வழிசெய்தார். நாவலர் சைவத்தையும் தமிழையும் தன் இருகண்களாக கொண்டு செயற்பட்டதுடன் சமுகத்துக்கும் பல பணிகளை செய்தார்.



"நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே..."

என்று புகழக் கூடியவகையில் நாவலரது பணிகள் அமைந்திருந்தன.

கு. கோபிராஜ்
B.A (Hons)Hin SpI.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியை வழிபட்டால் சக்திமான்கள் ஆகலாம்!

இந்து சமயத்தில் சக்திவழிபாடு மிக தொன்மைக் காலம்தொட்டு நிலவி வருகிறது. இந்துப்பண்பாட்டில் வளத்தையும், சிறப்பையும் தரும் சகலவற்றையும் பெண்பால் பெயரால் அழைக்கும் வழமை நிலவி வருகின்றது. நாம் வாழும் பூமியை பூமாதேவி என்றும், நாட்டினை தாய்நாடு என்றும், நாம்பேசும் மொழியை தாய் மொழி என்றும் அழைக்கும் மரபு தொன்று தொட்டு நிலவிவருகின்றது, புனித தீர்த்தங்களாகப் போற்றப்படும் நதிகளையும் கங்கை,யமுனை,சரஸ்வதி,காவேரி,நர்மதா எனப் பெண்களின் பெயர்களினாலேயே அழைத்துவருகிறோம். தயைப் பிரகாஜினியாகக், கருணையே வடிவமாக இருக்கின்ற சக்திக்குரிய விரதங்களில் நவராத்திரி விரதம் சிறப்பானதாகும்.

பிரபஞ்சமே அன்னை பராசக்தியின் உருவமாகத் திகழ்கிறது. அகிலாண்டேஸ்வரியாக இருந்து, அண்டசராசரமெல்லாம் பரிபாலிக்கும் அன்னைபராசக்தியின் அருட்பார்வை கிடைத்துவிட்டால் உலகில் நாம்நினைப்பதெல்லாம் நம்வசப்பட்டுவிடும்.

"அன்னை வடிவமடா- இவள்
ஆதிபராசக்தி தேவியடா! இவள்
இன்னருள் வேண்டுமடா! பின்னர்
யாவும் உலகில் வசப்பட்டுப் போமடா"

என்பது மகாகவி பாரதியின் வாக்காகும்.

"தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை" என்ற கம்பன் வாக்கிற்கு அமைய எடுத்தகாரியங்களைத் தளர்வறியாமனத்துடன் செய்துமுடிக்கும் ஆற்றல் ஆகிய வீரத்தை வேண்டி துர்க்கையை வழிபடுகின்றோம். சகலசெல்வயோகம்மிக்க பெருவாழ்வு பெறுவதற்கான பதினாறு செல்வங்களும் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்தித்து லட்சுமியைத் துதிக்கின்றோம். கால வெள்ளத்தால் அழியாத பெரும் செல்வமாகிய கல்வியை வேண்டிச் சரஸ்வதியைப் பிரார்த்திக்கின்றோம். இந்த முப்பெரும் சக்திகளின் திருவருளையும் ஒருங்கு சேர, பெற்றுப் கொள்வதற்காகவே நவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கின்றோம்.

இல்லங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் ஆகிய எல்ல இடங்களிலும் நவராத்திரிவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பத்தாவது நாளாகிய விஜயதசமி வெற்றிக்குரிய திருநாளாக ஏடு தொடக்குதல் போன்ற மங்களகரமான நிகழ்வுகள் நடைபெறும் நாளாக உள்ளது.

வாழ்கையில் உயர்வடைய வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு உந்து சக்தியாக அம்பிகை இருக்கின்றாள். எண்ணங்களை செயல் வடிவமாக்க விரும்புகிறவர்களுக்கு திசைகாட்டி, வழிகாட்டும் தெய்வமாக திகழ்வாள். கைவருந்தி உழைப்பவர் கரங்களிலும், கவிஞர்களின் நாவிலும் நர்த்தனம் இடுவாள்.

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வமென்ற கருத்துடையோர்கள்
உயிரினுக்குயிராகிய தெய்வம்
செய்வமென்றொரு செய்கை எடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடும் தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்



எனசக்தி உபாசகராகிய பாரதியார் சக்தியை வழிபடுவோர் பெறும் பயன்களைப் பட்டியலிட்டுதருகின்றார். நவராத்திரி விரதகாலமாகிய இப்புனித நாட்களில் நாம் அனைவரும் சக்தியை வழிபட்டு சக்தி மான்களாக உயர்வோமாக!

**சிவத்தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நட்பை வளர்ப்பதற்கு.....

வைரமுத்து (கவிஞர்) ஒரு கவிதையில் சொல்கிறார் "இந்த பூமி காதலால் சுற்றுகிறது" என்று. ஆனாலும் நான் சொல்கிறேன் இந்த பூமி நட்பால் சுற்றுகிறது. நல்ல நண்பர்களால் சுற்றுகிறது. ஆம். நண்பர்கள் எமது உயிர்நாடிகள். நல்ல நண்பர்கள் நம்மை வளர்க்கவல்ல சக்திகள். நல்ல நண்பர்கள் நமக்கு கிடைத்து விட்டால் "தென்றலைக்கைப்பிடித்து நந்தவனம் வலம் வந்த மகிழ்வு வாழ்வெல்லாம். தடைக்கற்கள் கூட படிக்கற்களாக மாறும் - நல்ல நட்பு கிடைத்துவிட்டால். இவ்வாறான நட்பை நாம் எவ்வாறு பெறுவது? இதோ சில வழிகள்

- **உங்கள் வயது ஒத்தவர்களை தேர்வு செய்யுங்கள்.**

  உங்களது நண்பர் குழுமத்தில் உங்கள் வயதை சேர்ந்தவர்களை மட்டுமே இணையுங்கள். அதிக வயதானவருடன் நட்பு வைத்தல் சிலவேளை உங்களை தவறான வழிக்கு இட்டுச்செல்லும்.

- **உண்மையே பேசுங்கள்.**

  எப்பொழுதும் உங்கள் நண்பர்களுடன் உண்மையே பேசுங்கள். எந்தவொரு காரணத்திற்காகவும் நண்பர்களிடையே பொய் பேசாதீர்கள். பொய் பேசுதல் நண்பர்களிடையே நம்பிக்கையின்மையையும் சந்தேகத்தையும் வளர்க்கும். உண்மை பேசுதல் புரிந்துணர்வை வளர்க்கும்.

- **உதவி செய்யுங்கள்.**

  உங்களது நண்பர்களது சுமைகள் எல்லாம் உங்களது என்று கருதுங்கள். உதவுங்கள்..... உதவுங்கள்.... உங்கள் கைகள் தேய்ந்து போகும் வரை உதவுங்கள். ஆயுள் கரையும் மட்டும் உதவுங்கள்.

- **மன்னிப்புக் கேளுங்கள்.**

  உங்களினுடைய தவறிற்கு தயங்காமல் உங்கள் நண்பர்களிடம் மன்னிப்புக் கேளுங்கள். நண்பர்களிற்குள் "ஈ கோ" வேண்டாம். உங்கள் தவறிற்கு நீங்கள் மன்னிப்புக் கேட்கும் போது, உங்கள் தொடர்பான உங்கள் நண்பனின் எண்ணம் உயர்வாக இருக்கும்.

- **பாராட்ட பழகுங்கள்.**

  உங்கள் நண்பர்களின் சிறு சிறு வெற்றிகளிலும் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விரைவாக முன்வந்து அவர்களை பாராட்டுங்கள். ஒருவர் வெற்றியில் மற்றவருக்கு இருக்கும் அக்கறை நட்பை வளர்க்கும்.

- **தவறை சுட்டிக்காட்டுங்கள்**

  உங்கள் நண்பர்கள் தவறு விடும் போது அவசரப்பட்டு கோபப்படாதீர்கள். உங்கள் நண்பர்களுடன் சண்டை போடாதீர்கள். மாறாக, இதமாக எடுத்துச் சொல்லுங்கள். அவரின் தவறால் ஏற்படும் பாதக விளைவுகளை வரிசைப்படுத்தி சொல்லுங்கள். நிச்சயமாக உங்கள் நண்பர் உங்கள் வார்த்தைகளிற்கும் பொறுமைக்கும் செவிசாய்ப்பார்.

*மு. சொரூபினி*
*3ம் வருடம், முகாமைத்துவபீடம்*
*யாழ் பல்கலைக்கழகம்.*

## வீட்டுப் பெயரும் விஞ்ஞானப் பெயரும் குறியீடும்

நாம் அன்றாடம் வீட்டில் உபயோகிக்கும் பொருள்களை பேச்சு வழக்கிலே அழைக்கும் பெயர்களுக்கான இரசாயனப் பெயரும் இரசாயனக் குறியீடும் பின்வருமாறு!

| வீட்டுப்பெயர் | இரசாயனப்பெயர் | இரசாயனக் குறியீடு |
|---|---|---|
| சலவைச் சோடா | சோடியம் காபனேற்று | $Na_2 Co_3$ |
| அப்பச் சோடா | சோடியம் இருகாபனேற்று | $NaH Co_3$ |
| எரி சோடா | சோடியம் ஐதரொட்சைட்டு | $Na(OH)_2$ |
| கறியுப்பு | சோடியம் குளோரைட்டு | NaCl |
| வீக்க உப்பு | மகனீசியம் சல்பேற்று | $Mg\ so_4$ |
| வெடிமருந்து | பொற்றாசியம் நைத்ரேற்று | $KNo_2$ |
| நீறிய சுண்ணாம்பு | கல்சியம் ஐதரொட்சைட்டு | $Ca(OH)_2$ |
| நீறாத சுண்ணாம்பு | கல்சியம் ஒட்சைட்டு | Cao |
| சுண்ணாம்புககல் | கல்சியம் காபனேற்று | $CaCo_3$ |
| வினாகிரி | அசற்றிக்கமிலம் | CH3 COOH |
| சீனி உரம் | அமோனியம் சல்பேற்று | $(NH4)_2\ SO_4$ |
| நவச்சாரம் | அமோனியம் குளோரைட்டு | $NH_4Cl$ |
| கொண்டிஸ் | பொற்றாசியம் பரமங்கனேற்று | $KMnO_4$ |
| மகனீசியம் பால் | மகனீசியம் ஐதரொட்சைட்டு | $Mg(OH)_2$ |
| நைதரசன் பசளை | யூரியா | $CO(NH)_2$ |



த. ரவிசாந்
9A
யா/ யூனியன் கல்லூரி தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்களுக்கு வர்ணம் தீட்டுவோமா




ஜெ. புகாரி 8B
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்



ச. சசிகரன் தரம் 9
யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்



E. vinothavan 6B
S.J.C





ச. கவிதாஞ்சி 4A
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

**வாசகர்கள் தங்கள் ஆக்கங்களையும், ஆலோசனைகளையும், போட்டிகளுக்கான விடைகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி**

T.P 021 5100282 இரா. ஜெயக்குமார், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org